# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு : 13 / 2016** **நாள்: 30.09.2016**

### காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் மாநில தேர்தல் அலுவலர்களுடன் தேர்தல் பாதுகாப்பு குறித்த கலந்தாய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு.பெ. சீத்தாராமன், இ.ஆ.ப., (ஓ) அவர்கள் இன்று 10.00 மணியளவில் ஆணையக் கூட்டரங்கில் உள்ளாட்சி தேர்தல்களுக்காகச் செய்திட வேண்டிய காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து காவல்துறை இயக்குநர் திரு.டி.கே.ராஜேந்திரன், இ.கா.ப., உடன் ஆலோசனை செய்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திரு.த.சு.ராஜசேகர், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆப., பேரூராட்சிகள் இயக்குநர் திரு.கே.மகரபூஷணம், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சிகள் துறை இயக்குநர் திரு.கே.பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் சென்னை மாநகராட்சி துணை ஆணையர் திரு.அன்புச்செல்வன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்துகொண்டனர்.

17.10.2016 மற்றும் 19.10.2016-ல் நடைபெறவுள்ள உள்ளாட்சித் தேர்தலை மிக நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடத்தவும் மக்கள் சிறிதும் அச்சமின்றி வாக்களிப்பதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்றும் அதற்குரிய காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யும்படி மாநில தேர்தல் ஆணையர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

1. வாக்குச்சாவடிகளுக்கும், வாக்குச்சீட்டு பகிர்வு மையங்கள், வாக்குச்சீட்டுகள் பாதுகாப்பு அறை, மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கும் உரிய காவல்துறை பாதுகாப்பு வழங்குதல்.
2. அமைதியான, சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தலை நடத்துவதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது.
3. அரசு அச்சகம் மற்றும் பிற அச்சகங்களிலிருந்து வாக்குச்சீட்டுகளை, பகிர்வு மையங்கள் அமைந்துள்ள மாவட்ட அலுவலகங்களுக்குப் பாதுகாப்பாக கொண்டு செல்வது.

4. சிறப்பு காவலர்கள், ஊர்காவல் படையினரையும், பிறரையும் தேர்தல் பணிகளுக்குப் பயன்படுத்துதல்.
5. அனைத்து மாவட்டங்களிலும், சென்னையிலும் பொதுமக்கள் புகார் தருவதற்கான காவல்துறையினரின் தொடர்பு எண்களை வழங்குதல்.
6. தேர்தல் நன்னடத்தை விதிகளை உறுதியாக நடைமுறைப்படுத்துதற்கு பறக்கும் படையுடன் காவல்துறை அலுவலர்கள் உடன் செல்லுதல்.
7. சமுதாயத்தின் பலவீனமான பிரிவினரைக் கட்டாயப்படுத்துவதையும், அச்சுறுத்துவதையும் தடுக்க நடவடிக்கை எடுத்தல்.
8. துப்பாக்கிகள் மற்றும் தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் வைத்திருப்பதை கட்டுப்படுத்துதல், முறைகேடான சட்டவிரோதமான ஆயுதங்களைப் பறிமுதல் செய்தல்.
9. தடைசெய்யப்பட்ட காலத்தில் மது விற்பனை செய்வதைக் கண்காணித்தல்.
10. மாநில எல்லைகளைக் கண்காணித்தல்.

மேற்கண்ட விபரங்களை அனைத்து மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள், மண்டல காவல்துறை துணை தலைவர்கள் உட்பட அனைத்து காவல்துறை அலுவலர்களுக்கும் தெரிவித்து உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு காவல்துறை இயக்குநரைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

30/9/16
மக்கள் தொடர்பு அலுவலர்